சுருக்கம்

நிதி – பேரூராட்சிகள் நிர்வாகம் – பல்வேறு திட்டப் பணிகளை மேற்கொள்ள, 2013–14ம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.46,31,89,000/– மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.10,37,93,000/–ம் நிதி ஒப்பளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 2) துறை

அரசாணை ( ப ) எண். 113

நாள்.27–03–2014.
திருவள்ளுவர் ஆண்டு –2045,
விஜய பங்குனி –13

பேரூராட்சிகள் இயக்ககம் ★ சென்னை-600 108 ★
28 MAR 2014

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.199, நிதித்துறை (FC-IV) நாள்.15.07.2007.
2) அரசாணை (நிலை) எண்.194, நிதித்துறை, (FC.IV) நாள்.10.06.2013
3) அரசு ஆணை (ப) எண்.382, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள்.11.07.2013.
4). பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.2700/2013/உ4, நாள்.26.02.2014

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–14ஆம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.29,92,25,000/–ம் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.19,94,83,000/–ம் பொதுக்குழுவின் மூலம் ஒப்புதல் பெற்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக நிதி விடுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பேரூராட்சிகளின் இயக்குநர் தமது கடிதத்தில் 2013–2014ம் ஆண்டில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 3%லிருந்து 7%–ஆக உயர்த்தப்பட்டதாகவும் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2% லிருந்து 3%–ஆக உயர்த்தப்பட்டதாகவும் அதன்படி திருத்திய வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளின் விவரத்தினை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | உட்தலைப்பு விவரம் | திருத்திய மதிப்பீடுகளின்படி மொத்த நிதி ஒதுக்கீடு | ஏற்கனவே விடுவிக்கப்பட்ட தொகை | மீதமுள்ள கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|---|
| | | | (இலட்சத்தில்) | |
| 1 | உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Infrastructure Gap filling fund) | 7624.14 | 2992.25 | 4631.89 |
| 2 | இயக்க மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&M Gap filling fund) | 3032.76 | 1994.83 | 1037.93 |

3. எனவே, 2013–14ம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையான ரூ.76,24,14,000/–ல் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட தொகை ரூ.29,92,25,000/– போக மீதமுள்ள தொகையான ரூ.46,31,89,000/–ம் மற்றும் 2013–14ம் ஆண்டிற்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையான ரூ.30,32,76,000/–ல் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட தொகை ரூ.19,94,83,000/–ல் போக மீதமுள்ள தொகையான ரூ.10,37,93,000/–ம் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்து, மேற்படி தொகைகளுக்கான பணிகளை பொதுக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் திருத்திய வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்கண்ட தொகைகளை விடுவிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்படி பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன்படி 2013–2014ம் ஆண்டிற்கான, உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.39,52,95,000./–ம், மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.7,46,95,000/–ம் விடுவித்தும், அத்தொகையைப் பெற்று தமிழ்நாடு அடிப்படை வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கும் நிதி (PD A/c No.01G03099750BQ)யின் பொது வைப்புக் கணக்கில் வரவு செய்து இந்நிதியினைக் கையாண்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையினை பொதுக்குழுவின் மூலம் ஒப்புதல் பெறப்படும் பணிகளை மேற்கொள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது:-

i. ஒப்பளிக்கப்பட்ட நிதி தொடர் செலவினங்களுக்காகவும் அல்லது ஏற்கனவே செய்யப்பட்ட பணிகளுக்காகவும் அல்லது 2013–2014–ஆம் ஆண்டில் செய்யப்படவேண்டிய மீதி பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும்.

ii. இச்செலவினத்தில் புதிய பணிகள் ஏதும் மேற்கொள்ளக்கூடாது .

iii. இதுவரை பணிகள் தொடங்கப்படாமல் இருப்பின் விடுவிக்கப்பட்ட நிதியை தேர்தல் நடைமுறைகள் முடிந்தபின்தான் செலவிடப்படவேண்டும்.

iv. விடுவிக்கப்படும் நிதி தொடர்பாக எவ்வித விளம்பரமும் செய்யக்கூடாது.

5. மேற்படி செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:-

**1) உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதித் தொகை ரூ.39,52,95,000/ –**

"**3604–00** உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் **193** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி I திட்டத்தில் சேராதது – AC அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை **09** உதவித் தொகை **02** மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித்தொகை" (த.தொ.கு.3604 00 193 AC 0923)".

**2) இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புப் நிதித் தொகை ரூ.7,46,95,000/–**

"**3604–00** உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் – 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி–I திட்டத்தில் சேராதது – AD இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை**–09** உதவித் தொகை**–02** மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித்தொகை (த.தொ.கு. 3604-00-193-AD-0921)".

6.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 12768/MAWS/2014, நாள்05.03.2014–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. பணீந்திர ரெட்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை –108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
மாநில கணக்காயர், சென்னை –9/18.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, குறளகம், சென்னை –108.

<u>நகல்</u>
செயலரின் தனி செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நிதி (ந.நி (ம) கு.வ./நிகு–IV / வழிவகை மற்றும் கடன்கள் ) துறை,சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2 / வ.செ.) துறை, சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

தி.க. பானுமதி 3/14
பிரிவு அலுவலர்